**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 121 **நாள்:** 27.02.2026

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை மற்றும் இராயபுரம் மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், இன்று (27.02.2026) பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மற்றும் இராயபுரம் மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் இரவு பாடசாலை மற்றும் திறன் மேம்பாட்டு மையம், குழந்தைகள் மையக் கட்டடம், பல்நோக்கு மையக் கட்டடம் என மொத்தம் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 5 திட்டப்பணிகளைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு மேயர் அவர்கள், பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-44க்குட்பட்ட சத்தியவாணி முத்து நகர், பாடசாலை தெருவில் மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் இரவு பாடசாலை மற்றும் திறன் மேம்பாட்டு மையத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இதனால் பெரம்பூர், வியாசர்பாடி, சத்தியவாணி முத்து நகர், காமராஜர் நகர், கக்கன்ஜி காலனி, பெரியார் நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடைவர்.

இதனைத் தொடர்ந்து, கருணாநிதி சாலை 2வது தெருவில் மூலதன நிதியின் கீழ் ரூ.46.50 இலட்சம் மதிப்பீட்டில் குழந்தைகள் மையக் கட்டடத்தைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இதனால் கருணாநிதி நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்த கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் பயனடைவர்.

பின்னர், பெரியார் நகர், ராணி அம்மையார் தெருவில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் குழந்தைகள் மையக் கட்டடம்-1 மற்றும் மாநகராட்சி மூலதன நிதியில் ரூ.18.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தில் உள்ள நியாய விலைக் கடை மற்றும் குழந்தைகள் மையக் கட்டடம்-2 ஆகியவற்றை திறந்து வைத்து, குழந்தைகளுக்கு தட்டு மற்றும் டம்ளர்களை வழங்கினார். இதனால் பெரியார் நகர், ராணி அம்மையார் தெரு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளைச் சார்ந்தவர்கள் பயனடைவர்.

தொடர்ந்து, இராயபுரம் மண்டலம், வார்டு-53க்குட்பட்ட பெரியபாளையத்தம்மன் கோயில் தெருவில் ரூ.8.30 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் குழந்தைகள் மையக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐட்ரீம் ஆர். மூர்த்தி, வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர் (வரிவிதிப்பு (ம) நிதி) திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன், மாமன்ற உறுப்பினர் திருமதி பா. வேளாங்கண்ணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**